# 2013

# வருடாந்த அறிக்கை

EDB

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

2015.07.03

மாண்புமிகு அப்துல் றிஸாத் பதியுதீன்

கைத்தொழில்வர்த்தக அமைச்சு

73/1,காலி வீதி,

கொழும்பு - 03

மாண்புமிகு ஐயா,

ஆண்டறிக்கையும் கணக்குகளின் கூற்றுக்களும் - 2013

1971 அம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 13 (2) இன் பிரகாரம் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையினை பின்வரும் ஆவணங்களுடன் இணைத்து, பணிப்பாளர் சபையின் சார்பில் சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

- தலைவரின் அறிக்கை
- கணக்குகளின் கூற்று
- கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

உண்மையுள்ள,

பன்துல எகொடகே

தலைவரும் பிரதான நிறைவேற்று அதிகாரியும்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

# சிரேஷ்ட முகாமைத்துவப் பணியாளர்கள்-2013

| | | |
|---|---|---|
| தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்றுனர் | - | திரு. ஜனக ரத்ணாயக்கா |
| பணிப்பாளர் நாயகம் | - | திருமதி. டப்ளியு எம்.டீ.எஸ். வீரக்கோன் |
| நிறைவேற்றுப்பணிப்பாளர் | - | கலாநிதி யூசுப் கே மரிக்கார் |
| நிதிப் பிரிவு | - | திருமதி. பீ. கே. சுமித்ராரச்சி<br>பணிப்பாளர் |
| மனித வளங்களின் அபிவிருத்திப் பிரிவு | - | திரு. எஸ். பீ.எம்.ஜீ. சந்திரகுமாரபதில் பணிப்பாளர்<br>( 21.10.2013இலிருந்து) |
| வர்த்தக வசதியளிப்பும், வர்த்தகத் தகவல் பிரிவும் | - | திரு. எம். கே. உதயபால (08.06.2013 வரை)<br>பணிப்பாளர்<br>திரு. எஸ்.ஆர்.பீ.என். பியசிறி (18.06.2013இலிருந்து)<br>பதில் பணிப்பாளர் |
| தகவல் தொழில்நுட்பப் பிரிவு | - | திருமதி எம். பத்தேகமகே<br>பதில் பணிப்பாளர் |
| ஏற்றுமதிச் சந்தைப்படுத்தல் அபிவிருத்திப் பிரிவு | - | திருமதி ஜே. சிறிவர்தன<br>பணிப்பாளர் |
| ஏற்றுமதிச் விவசாயப் பிரிவு | - | கலாநிதி (திருமதி) எம்.எல்.ஏ. சமரப்புலி<br>பணிப்பாளர் |
| பிராந்திய அபிவிருத்திப் பிரிவு | - | செல்வி. ஆர்.எம். பீ. ஹேவாலியனகே<br>பணிப்பாளர் |
| கொள்கை மற்றும் உபாயத் திட்டமிடல் பிரிவு | -<br>- | திருமதி. டீ. வேகபிட்டிய<br>பதில் பணிப்பாளர் |
| கைத்தொழில் உற்பத்திப் பொருட்களின் பிரிவு | - | செல்வி. சீ.திசாநாயக்கா<br>பணிப்பாளர் |
| ஏற்றுமதிச் சேவைகள் பிரிவு | - | திரு. எம்.கே. எஸ். மல்தெனி<br>பணிப்பாளர் |
| விசேட கருத்திட்டங்கள் பிரிவு | - | திரு. டீ. ஜயவர்தன<br>பணிப்பாளர் |
| உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | - | திரு. எம்.கே.என். அபே தீர<br>பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் |
| சட்டப் பிரிவு | - | திருமதி. டீ. டீ. விஜேரத்ன<br>சட்ட அலுவலர் |
| கணக்காய்வாளர் | - | கணக்காய்வாளர் நாயகம் |
| வங்கியாளர்கள் | - | இலங்கை வங்கி<br>சம்பத் வங்கி<br>தேசிய அபிவிருத்தி வங்கி |

**<u>பதியப்பட்ட அலுவலகம்</u>**

இலக்கம் 42, நவம் மாவத்தை,
கொழும்பு 02

## இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
## பணிப்பாளர்களின் சபை - 2013

| | | |
|---|---|---|
| 01. | திரு. ஜனக ரத்னாயக்கா | - தலைவர் |
| 02. | கலாநிதி யூசுப் கே மரிக்கார் | - பணிப்பாளர் |
| 03. | திரு. நவாஸ் ரஜாப்டீன் | - பணிப்பாளர் |
| 04. | திரு. சரப் எம் சுஜப் | - பணிப்பாளர் |
| 05. | திரு.சுமித் விஜேசிங்க | - பணிப்பாளர் (2013 மே மாதம் வரை) |
| 06. | திரு.கே. பீ. அலாவுடீன் | - பணிப்பாளர் (2013 ஜுன் மாதம் வரை) |
| 07. | திரு. ரொஹன்த என். ஏ. அத்துகோரல | - பணிப்பாளர் |
| 08. | கலாநிதி. சீ.சீ.வை. அபேவர்தன | - பணிப்பாளர் (2013 ஜுன் மாதம் வரை) |
| 09. | திரு. எஸ். அலாம்டீன் | - பணிப்பாளர் (2013 டிசம்பர் மாதத்திலிருந்து) |
| 10. | திரு. ஏ.கே. செனெவிரத்ன | - மேலதிகச் செயலாளர், ஐகத்தொழில் மற்றும் வணிக அமைச்சு |
| 11. | திரு. அனுராதா விஜேகோன் | - மேலதிகச் செயலாளர், துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு |
| 12. | திரு. எம். எச். முயீனுடீன் | - மேலதிகச் செயலாளர், விவசாய அமைச்சு (2013 ஏப்ரில் மாதம் வரை ) |
| 13. | திரு.அசோகசிறிவர்தன | - மேலதிகச் செயலாளர், விவசாய அமைச்சு (2013 நவம்பர் மாதம் வரை ) |
| 14. | திரு.பீ.எல்யு. திசாநாயக்கா | - மேலதிகச் செயலாளர், பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு (2013 ஏப்ரில் மாதம் வரை) |
| 15. | திரு. யு.கே.எஸ். மிகிந்துகுலசூரிய | - மேலதிகச் செயலாளர், பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு (2013 டிசம்பர் மாதம் வரை) |
| 16. | கலாநிதி. (திருமதி)ஏ. தமிதா டீ சொயசா | - செயலாளர், கடற்றொழில் மற்றம் நீரியல் வளங்கள் அமைச்சு (2013 பெப்ரவரி மாதம் வரை) |
| 17. | கலாநிதி. D.M.R. Dissanayake | - செயலாளர், கடற்றொழில் மற்றம் நீரியல் வளங்கள் அமைச்சு (2013 பெப்ரவரி மாதம் வரை) |

| | | |
|---|---|---|
| 18. | கலாநிதி. நேவில் குணவர்தன | - பணிப்பாளர் நாயகம்,<br>வியாபார, தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்<br>நிதித்திட்டமிடல் அமைச்சு<br>(2013 ஜூலை மாதம் வரை) |
| 19. | திரு. கே.எம்.எம் சிறிவர்தன | - பணிப்பாளர் நாயகம்,<br>அரசிறைக் கொள்கைகள்திணைக்களம்<br>நிதித்திட்டமிடல் அமைச்சு<br>(2013 அக்டோபர் மாதம் வரை) |
| 20. | திரு. ஐ. அன்சார் | - மேலதிகச் செயலாளர்,<br>வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு<br>(2013 ஜூலை மாதம் வரை) |
| 21. | திரு.வீ. சிவஞானசோதி | - செயலாளர்,<br>மரபுமுறைக் கைத்தொழில்கள் மற்றும் சிறிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு |
| 22.. | திரு.சஞ்சீவ விக்கரமநாயக்கா | - சபை அங்கத்தவர்<br>இலங்கை முதலீட்டுச் சபை |

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 01 | அறிமுகம் | 72 |
| 02 | 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஏற்றுமதிச் செயலாற்றுகை | 73 - 96 |
| 03 | 2013.12.31 ஐந்தொகை | 97 |
| 04 | வருமான மற்றும் செலவினக் கூற்றுக்கள் | 98 |
| 05 | காசுப்பாய்ச்சல் கூற்று | 99 - 109 |
| 06 | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 110 - 132 |

# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

## தொலைநோக்கு

இனங்காணப்பட்ட பிரதான உற்பத்திப் பொருட்கள் துறைகளுக்கான உலகளாவிய மூலங்களுக்கான அமைவிடங்களின் பின்னர் பிரதான வழங்குநராக இலங்கையை மாற்றுதல்

## பணிக்கூற்று

உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டிற்கான பிரதான அரச நிறுவனமாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையை மாற்றுதல், இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களின் சர்வதேச போட்டித் தன்மையினை அதிகரித்தல், பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியின் மூலம் கிடைக்கப் பெறும் அந்நியச் செலாவணியினை உச்சப்படுத்துதல், மற்றும் தேசிய பொருளாதார இலக்குகளை அடைவதற்கு பங்களிப்புச் செலுத்துதல்.

## ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் குறிக்கோள்கள்

01. "மஹிந்த சிந்தனை –எதிர்கால நோக்கின்"பிரகாரம் இலங்கையின் உற்பத்திப் பொருட்களினதும் மற்றும் சேவைகளினதும் ஏற்றுமதிப் பெறுமதியை 2015 ஆம் ஆண்டளவில் 15 பில்லியன் அமெரிக்க டொலர்களாகஅதிகரிக்கச் செய்தல்

02. ஐரோப்பிய சங்கம் மற்றும் ஐக்கிய அமெரிக்க சந்தைகளில் இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்புக்களை ஒன்று திரட்டும் அதே வேளை, ஐரோப்பிய சங்கம் மற்றும் ஐக்கிய அமெரிக்காதவிர்ந்த ஏனைய வெளிநாட்டுச் சந்தைகளுக்கான ஏற்றுமதிகளை,2016 ஆம் ஆண்டளவில் 50 சதவீதத்தினால் அதிகரித்தல்.

03. இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானத்திற்கு ஏறத்தாழ 80 சதவீத பங்களிப்பைச் செலுத்தும் இனங்காணப்பட்டுள்ள பிரதான ஏழு (07) உற்பத்தித் துறைகளில் விசேட கவனம் செலுத்தலும், அத்துறைகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைதலும்.

04. தெரிவு செய்யப்பட்ட சந்தைகளில் ஒன்றிணைக்கப்பட்ட சந்தைப்படுத்தல் தொடர்பாடல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதன் ஊடாக, இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக மிகச் சாதகமான சிறந்த மனப்பான்மையினை சர்வதேச ரீதியில் ஏற்படுத்துதல்


05. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள்உட்படஏற்றுமதி வர்த்தகத்தின் நன்மைகளை, அத்துறையில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினருக்கும் நாட்டின் சகல பிரதேசங்களுக்கும் கிடைப்பதற்கு வழியமைத்தல்.

06. இலங்கைஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஊழியர்களின் உற்பத்தித் திறன் மற்றும் அர்ப்பணிப்பு என்பன தொடர்பில் விசேட கவனம் செலுத்தி,இலங்கையின் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் முக்கிய விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படக் கூடிய விசேட திறமை வாய்ந்த குழுவொன்றினை உருவாக்குதல்.


## 1] அறிமுகம்

ஏற்றுமதிகளின் அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டிற்குப் பொறுப்பான இலங்கையின் பிரதான அரச நிறுவனமான இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அதன் பொறுப்புக்களை மேற்கொள்வதில் அதன் செயற்பரப்பினையும் பங்கையும் தெளிவாக இனங்கண்டுள்ளது. இல்ங்கை ஏற்றுமதி அபவிருத்திச் சபை கொள்கை ஆலோசனையாளர், கண்காணிப்பாளர், மேம்பாட்டாளர், வசதியளிப்பாளர், மற்றும் அறிவை வழங்குவோர் போன்ற இன்னோரன்ன பங்குகளை வகிக்கின்றது.

## 2] 2013 ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பிரிவிற்கான ஏற்றுமதிச் செயலாற்றுகை



**මාසික අපනයන ප්‍රගතිය 2011 – 2013**




| | ජන | පෙබ | මාර් | අප්‍රේ | මැයි | ජුනි | ජුලි | අගෝ | සැප් | ඔක් | නොවැ | දෙසැ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2011 | 903 | 882 | 921 | 759 | 833 | 820 | 962 | 951 | 853 | 890 | 879 | 906 |
| 2012 | 888. | 821 | 861 | 748. | 806 | 755. | 794. | 828. | 801. | 770. | 827. | 871. |
| 2013 | 728. | 797. | 837 | 696. | 793. | 807. | 857. | 918. | 890. | 1041 | 1032 | 986. |

2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தின் ஏற்றுமதி வருவாயுடன் ஒப்பிடுகையில் 2013 டிசம்பர் மாதத்தின் ஏற்றுமதி வருவாயானது 25.16 சதவீதத்தால் கணிசமான அளவில் அதிகரித்துள்ளது. 2013 ஜனவரி – டிசம்பர் மாதம் வரையிலான செயலாற்றுகையினைக் கருத்திற் கொண்டு, மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட காலப்பிரிவில் மொத்த ஏற்றுமதி வருவாய் முறையே 24 சதவீதம், 23 சதவீதம் மற்றும் 73 சதவீதத்துக்குப் பங்களிப்புச் செய்த விவசாயம், கடற்றொழில் மற்றும் கைத்தொழில் ஆகிய சகல மூன்று துறைகளும் முறையே 10.3 சதவீதம், 4.61 சதவீதம் மற்றும் 19.14 சதவீதம் என சாதகமான வளர்ச்சிகளைப் பதிவு செய்துள்ளன.

விவசாயத் துறையின் சாதகமான செயலாற்றுகையானது தேயிலையின் ஏற்றுமதி ( 9.22 சதவீதம்), வாசனைத் திரவியங்கள் (39.87 சதவீதம்), காய்கறிகள் (30.81 சதவீதம்), பழங்கள் ( 118.35 சதவீதம்), கொய்தப்பட்ட மலர்கள் மற்றும் மலர்ச் செடிகள் ( 36.12 சதவீதம்), மற்றம் வாசனை எண்ணெய் (33.47 சதவீதம்) ஆகியனவற3றின் அதிகரித்த ஏற்றுமதி வருவாயின் ஊடாக செலுத்தப்பட்ட அதே வேளை, இயற்கை இறப்பர் (-42.75 சதவீதம்), தென்னை உற்பத்திப் பொருட்கள் (-0.1 சதவீதம்) ஆகியனவற்றின் மூலமான ஏற்றுமதி வருவாய் குறைவடைந்துள்ளது.

கடற்றொழில் துறைக்குள்ளானசகல உப துறைகளும் இத்துறையின் சாதகமானசெயலாற்றுகைக்கு அதாவது அலங்கார மீன்கள் (41.35 சதவீதம்), நண்டுகள் (51.04 சதவீதம்), மற்றும் ஏனைய உண்ணத் தக்க மீன்கள் 12.6 சதவீதம்) பங்களிப்புச் செலுத்தியுள்ளன.

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பிரிவில் கைத்தொழில் துறைக்குள், நாட்டின் மொத்த ஏற்றுமதி வருவாயில் 42.3 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செலுத்திய துணிகளும், ஆடைகளும் 13.31 சதவீதத்தினால் அதிகரித்துள்ளன.

தோள் உற்பத்திப் பொருட்கள் ( 13.98 சதவீதம்), இறப்பர் உற்பத்திப் பொருட்கள் (3.59 சதவீதம்), உலோகமல்லாத கனிய வள உற்பத்திப் பொருட்கள் (5.79 சதவீதம்), மூல உலோக உற்பத்திப் பொருட்கள், (9.4 சதவீதம்), மின் இலத்திரனியில் மற்றும் இயந்திர உற்பத்திப் பொருட்கள் (5.21 சதவீதம்), கப்பல் கட்டுதல் (44.9 சதவீதம்), பிளாஸ்டிக் உற்பத்திப் பொருட்கள் (5.7 சதவீதம்), காலணிகள் (139.13 சதவீதம்), ஆகியனவற்றிலிருந்தான அதிகரித்த வருவாய் கைத்தொழில் உற்பத்திப் பொருட்களின் துறையின் சாதகமான செயலாற்றுகைக்குப் பங்களிப்புச் செலுத்தியுள்ளன. ஆயினும், மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பிரிவில், இரத்தினக்கற்கள், ஆபரணங்கள், மற்றும் வைரங்கள் (-21.72 சதவீதம்), உணவுப் பானங்கள், புகையிலை (-22.7 சதவீதம்), மர உற்பத்திப் பொருட்கள் (-1.48 சதவீதம்), கடதாசியும், கடதாசி உற்பத்திப் பொருட்களும் (-19.33 சதவீதம்), இரசாயன உற்பத்திப் பொருட்கள் (-3.93 சதவீதம்), போக்குவரத்து சாதனங்களும் பாகங்களும் (-49.41 சதவீதம்), பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (-7.98 சதவீதம்),ஆகியனவற்றின் ஏற்றுமதியிலிருந்து கிடைக்கப் பெற்ற வருவாய் வீழ்ச்சியுற்றது.

2013 ஜனவரி முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பிரிவில்ஐரோப்பிய ஒன்றியம் மற்றும்ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கான ஏற்றுமதிகள் முறையே 4.13 சதவீதத்தினாலும், 17.85 சதவீதத்தினாலும் அதிகரிக்கப்பட்டன.

**3] 2013 ஆம் ஆண்டு காலப்பிரிவில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்**

**ஆலோசனைக் குழுக்களை ஸ்தாபித்தல்**

ஏற்றுமதி அபிவிருத்திச் சபை 2013 ஜூன் மாதம் 11 ஆம் திகதியின் 1814/14 ஆம் இலக்க விஷேட வர்த்தமாணியினை வெளியிடுவதன் மூலம் 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் கீழ் 26 ஆலோசனைக் குழுக்களை ஸ்தாபித்தது. கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் கௌரவ ரிஷாத் பதியுத்தீன் அவர்கள் 2013 ஜூலை மாதம் 10 ஆம் திகதியன்று ஆலோசனைக் குழு அங்கத்தவர்களுக்கான நியமனக் கடிதங்களைக் கையளித்தார்.

மேலும்,ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, பொதுநலவாய நாடுகளின் தலைவர்களுக்கான மாநாட்டிற்கு (CHOGM) இணையாக கண்காட்சியினை வைப்பதற்கான கடமை ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது. இக்கண்காட்சியின் நோக்கம் தனிப்பட்ட ஒரு தளத்தில் சுமார் 200 – 300 ஏற்றுமதியாளர்களின் தரமான ஏற்றுமதி உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகளை காட்சிப்படுத்துவதாகும். ஏற்றுமதி அபிவிருத்திச் சபை இக்கண்காட்சியை ஏற்பாடு செய்வதற்கு ஆலோசனைக் குழு அங்கத்தவர்களின்ஆதரவை வேண்டிக் கொண்டது.

## 4] சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

மீளச் செயற்படுத்தப்பட்டசந்தை உபாயமொன்றுடன்ஏற்றுமதி அபிவிருத்திச் சபை எழுச்சி பெற்று வரும் பிரதான ஐந்து தேசங்களான பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆபிரிக்கா (BRICS) பிராந்தியத்துக்கு ஏற்றுமதிகளை விரிவாக்குவது தொடர்பான தனது முயற்சிகளைஒருமுகப்படுத்தும்.ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, ஆபிரிக்க நாடுகளிலும் மற்றும் பொதுநலவாய சுதந்திர ராஜ்யங்களிலும் வாய்ப்புக்களைப் பயன்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. துருக்கி போன்ற முன்னர் ஈடுபடுத்தப்படாத ஐரோப்பிய ஒன்றியத்திற்குள்ளான ஒரு சில நாடுகளும் கூட கவனத்தில் கொள்ளப்படும். உற்பத்திப் பொருட்கள், சந்தைப் பன்முகப்படுத்துகை மற்றும் பல்வேறு கொள்கை முறைமைகள் தொடர்பாகசெலுத்தப்பட்ட விஷேட முக்கியத்துவம் இத்துறையின் போட்டித் தன்மையை விருத்தி செய்யும் நோக்குடன் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதோடு, உற்பத்திப் பொருட்களை இலச்சினைப்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

### சந்தை மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள்

தற்போது நடைமுறையிலுள்ள, புதிய மற்றும் எழுச்சி பெற்று வரும் சந்தைகளில் இலங்கையின் உற்பத்திப் பொருட்களினதும், சேவைகளினதும் வெற்றிகரமான ஊடுருவலை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பிரிவில், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் பின்வரும் சந்தை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பிரிவில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் பின்வரும் சந்தை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பிரிவில் பின்வரும் வர்த்தகக் கண்காட்சிகளின் பங்கேற்புகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

***ஐரோப்பிய ஒன்றியப் பிராந்தியம்:***

-ஐரோப்பிய ஒன்றியத்தின் கடலுணவுக் கண்காட்சி - 0 6 ஏற்றுமதியாளர்களுடன்

-ஐபீஎம் எஸ்ஸென் கண்காட்சி (IPM Essen Fair) 2013 - 04 ஏற்றுமதியாளர்களுடன்

- பீஐஏ பேஸ் BIO FACH 2013 - 03 ஏற்றுமதியாளர்களுடன்

- பேபர் வேல்ட்–2013 - 7 ஏற்றுமதியாளர்களுடன்

சீஈபீஜஇ 2013, நெதர்லாந்து - 05 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வர்த்தகச் செயன்முறையை வெளியாட்களிடம் ஒப்படைத்தல்

- லண்டன் புத்தகச் சந்தை2013 - 07 புத்தகங்களை வெளியிடும் கம்பனிகள்

- தேசிய இலச்சினைப்படுத்தல் சர்வதேச கண்காட்சி, நெதர்லாந்து - 04 ஏற்றுமதியாளர்களுடன்
- சர்வதேச உணவு மற்றும் பான நிகழ்ச்சி [IFE], ஐக்கிய இராச்சியம், மார்ச் 2013 - 05 ஏற்றுமதியாளர்களுடன்

- அனுகா கண்காட்சி 2013, ஜேர்மன் - 15 ஏற்றுமதியாளர்களுடன்

அமெரிக்கப் பிராந்தியம்:

- SIAL கனடா வர்த்தகக் கண்காட்சியும், வெளிப்படுத்துகையும்
- உணவு மற்றும் பானத் தயாரிப்பாளர்களுக்கானது – 07 ஏற்றுமதியாளர்களுடன்
- IFT 2013, சிக்காக்கோ, ஐக்கிய அமெரிக்கா – 08ஏற்றுமதியாளர்களுடன்
- IFEAT 2013, சன் பிராஸிஸ்கோ, ஐக்கிய அமெரிக்கா – 04 ஏற்றுமதியாளர்களுடன்
- அதிசயங்களை வழங்குவதில் இலங்கையின் கண்காட்சி – 09 ஏற்றுமதியாளர்களுடன்

2013 ஆகஸ்ட் மாதம் 18 – 21 ஆம் திகதி வரை ஐக்கிய அமெரிக்காவின் லாஸ் வெகாஸில் இடம் பெற்ற சர்வதேச வடிவமைப்புக் கண்காட்சி

***ஆசியப் பிராந்தியம்:***

- அக்குவாராமா சர்வதேச மீன்களின் போட்டியும், கல்விப் பயண நிகழ்ச்சித் திட்டமும் - 17 ஏற்றுமதியாளர்களுடன்
- இந்திய இறப்பர் எக்ஸ்போ 2013 - 06 ஏற்றுமதியாளர்களுடன்
- ஹொங்கொங் வீட்டுப் பொருட்கள் கண்காட்சி 2013 - 06 ஏற்றுமதியாளர்களுடன்

- டுபாய் / ஐரோப்பிய நாடுகளில் தொழில்நுட்ப மற்றும் சந்தை வெளிப்படுத்துகை நிகழ்ச்சித் திட்டம் – 07 கம்பனிகளுடன்
- சீனாவில் இடம் பெற்றகாலணிகள் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்களுக்கான தொழில்நுட்ப வெளிப்படுத்துகை நிகழ்ச்சித் திட்டம் – ஏற்றுமதிக்கு ஆயத்தமாகவுள்ள 10 கம்பனிகள்
- சீனா PLAS 2013 – 08 ஏற்றுமதியாளர்களுடன்
- சேவைகளின் வர்த்தகத்திற்கான சீன பீஜிங் சர்வதேச சந்தையில் வர்த்தகத் தூதர் குழுவின் பங்கேற்பு [CIFTFS] - 07 ஏற்றுமதியாளர்களுடன்
- இந்தியாவில் இடம் பெற்ற SOLO இலங்கை நிகழ்ச்சி - 15 ஏற்றுமதிக் கம்பனிகளுடன்
- ஜப்பான் புட்டெக்ஸ் 2013 - 04 ஏற்றுமதியாளர்களுடன்
- முதலாவது சீனா தெற்காசியக் கண்காட்சி,SACTF,
- சீனாவின் குன்மிங் கண்காட்சி – 114 ஏற்றுமதியாளர்களுடன்
- ஜப்பான் IFEX கண்காட்சி - 12 ஏற்றுமதியாளர்களுடன்

***மத்திய கிழக்குப் பிராந்தியம்* : CIS &ஆபிரிக்கப் பிராந்தியம்:**

- கல்ப் உணவுஐக்கிய அராபிய இராச்சியம் 2013 - 15 ஏற்றுமதியாளர்களுடன்
- சய்டெக்ஸ் 2013 , – தென் ஆபிரிக்கா - 6 ஏற்றுமதியாளர்களுடன்

ஒரு சில பாரிய ஏற்றுமதிச் சந்தைகளில் தங்கியிருப்பதனைக் குறைத்து எமது ஏற்றுமதிகளை பன்முகப்படுத்தும் நோக்கத்துடன் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை இரண்டு சந்தை ஆய்வுகளை நடாத்தியது. அதன் பிரகாரம், இச்சந்தைகளுக்குள் நுழையும் நோக்குடன் பிரேசில் மற்றும் தென்னாபிரிக்கா தொடர்பான பின்வரும் இரண்டு அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டன. உயர்வான பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுடனான ஒரு நிலையமாக இனங்காணப்பட்டுள்ள பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆபிரிக்கா (BRICS) பிராந்தியத்துக் குழுவின் அங்கத்துவ நாடுகளாக பிரேசில் மற்றும் தென்னாபிரிக்கா விளங்குகின்றன.

- "இலங்கைக்கான சாத்தியமான ஒரு இலக்காக பிரேசிலின் பொருளாதாரம்" தொடர்பான ஒரு ஆய்வு
- "இலங்கையின் ஏற்றமதிகளுக்கான தென்னாபிரிக்கச் சந்தைகளை வாய்ப்புக்களை ஆய்வு செய்தல்" தொடர்பான ஒரு ஆய்வு

## பிரதான சந்தை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள்


### பெலரஸுக்கான வர்த்தக மேம்பாட்டுத் தூதுவர் குழு – 2013 ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை

ரஷ்யாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தினதும் மற்றும் வெளி விவகார அமைச்சினதும் வேண்டுகோளின் பேரில் 16 இலங்கை ஏற்றுமதியாளர்களை உள்ளடக்கிய வர்த்தகத் தூதுவர் குழுவொன்று 2013 ஆகஸ்ட் மாதம் 26 – 28 ஆம் திகதி வரை பெலரஸில் இடம் பெற்ற வர்த்தக அரங்கிலும் மற்றும் பீ2பீ கூட்டத்திலும் பங்கேற்பதற்காக விஜயம் செய்தது. இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளின் பங்கினை பலப்படுத்துவதனை நோக்கிய அரசாங்க அர்ப்பணிப்புக்களைப் பலப்படுத்துவதற்காக இவ்வர்த்தகக் குழுவுடன் இலங்கையின் அதி மேதகு ஜனாதிபதியும் விஜயம் செய்தார்.

வெளிநோக்கிய இத்தூதுவர் குழுவின் விளைவொன்றாக, இவ்வருடத்தின் நவம்பர் மாதத்தில் மின்ஸ்கின் வர்த்தகக் குழாமிலிருந்து 10 அங்கத்தவர்களைக் கொண்ட தூதுவர் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கைக்கு விஜயம் செய்த மின்ஸ்க் உழவியந்திரக் (ட்ரெக்டர்) கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம், இலங்கையில் உழவியந்திரக் (ட்ரெக்டர்) கூட்ட நிலையமொன்றை உருவாக்குவதற்கான சாத்தியத்தினை ஆராய்ந்தார். இக்கம்பனியும் “இலங்கையின் பிரதிபலிப்பில்” அதன் உழவியந்திரங்களின் ட்ரெக்டர்களின் வகைகளைக் காட்சிப்படுத்தும்.

இவ்விரு நாடுகளுக்கும் இடையில் வர்த்தகத்தினை விரிவடையச் செய்வதற்கான சந்தைத் தகவல்களை பரிமாறிக் கொள்வதற்கான சந்தைப்படுத்தல் மற்றும் விலை ஆய்விற்காக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கும், மற்றும் பெலரஸின் தேசிய நிலையத்திற்கும், புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

### துருக்கியில் இடம் பெற்ற 82 ஆவது இஸ்மிர் சர்வதேசக் கண்காட்சியில் இலங்கையின் நிபுணத்துவங்கள்





துருக்கியில் உள்ள இலங்கை தூதரகத்தின் ஆதரவுடன் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை 2013 ஆகஸ்ட் மாதம் 29 ஆம் திகதியிலிருந்து செப்தெம்பர் மாதம் 02 ஆம் திகதி வரை துருக்கியில் இடம் பெற்ற 82 ஆவது இஸ்மிர் சர்வதேசக் கண்காட்சியில் இலங்கையின் பங்கேற்பினை ஏற்பாடு செய்தது.

இலங்கையினி பங்கேற்பானது உயர் தரத்திலான ஏற்றுமதி உற்பத்திப் பொருட்களின் பாரிய அளவிலான சேகரிப்புக்களை காட்சிப்படுத்தியது. கிடைக்கப் பெற்ற விசாரணைகளைத் தொடர்வதற்கும் மற்றும் இலங்கையின் வர்த்தகத் தூதுவர் குழுவுடன்வலையமைப்பில் ஏற்படுத்தியிருந்த உலகம் பூராவிலுமுள்ள உபாய ரீதியான சந்தைகளிலிருந்தான கொள்வனவாளர்களுடன் ஏற்றுமதி ஆணைகளுக்கான பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**தென்னாசிய வர்த்தகச் சந்தை**

சீனாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் ஆதரவுடன் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை சீனாவின் குன்மினில் இடம் பெற்ற தென்னாசியா வர்த்தக் கண்காட்சியில் முதலாவதாக 130 வர்த்தகக் கொட்டகைகளுடன் இலங்கையின் பங்கேற்பினை ஏற்பாடு செய்தது. இந்நகர்வானது குறிப்பிடத்தக்க வர்த்தக விளைவுகளுடன் வெற்றிகரமாக செயற்படுகின்றது.

இக்கண்காட்சியானது, தென்னாசிய நாடுகளிலிருந்தான சீனாவிள் இறக்குமதிகளை விரிவடையச் செய்யும் நோக்கத்துடன் வர்த்தக அமைச்சினாலும், மற்றும் யுனான் மாகாண அரசாங்கத்தினாலும் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது. இலங்கைக் கண்காட்சிப் பிரதேசத்தின் கீழ், இரத்தினக் கற்களும் மற்றும் ஆபரணங்களும் (77), தேயிலை (12), கைவினைப் பொருட்கள் (15), தும்பு (3), இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் (2), மூலிகை உற்பத்திப் பொருட்கள் (1) சுற்றுலா (3) போன்ற துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 113 தனியார் துறைக் கம்பனிகள் இவ்வாண்டில் தமது உற்பத்திப் பொருட்களைக் காட்சிப்படுத்தின.

சிறந்த முறையில் செயலாற்றப்பட்ட துறைகளாக இரத்தினக் கற்களும், ஆபரணங்களும், தேயிலை, கைவினை உற்பத்திப் பொருட்கள், தும்பு உற்பத்திப் பொருட்கள் விளங்கின. இக்கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட துறைகள் அண்ணளவாக ஐக்கிய அமெரிக்க டொலர் 1.3 மில்லியன் பெறுமதியான வர்த்தகக் கட்டளைகளை பதிவு செய்தது.

அதே போல, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, இலங்கையின் தும்பை அடிப்படையாகக் கொண்ட சுற்றாடலுக்கு நட்புறவான மட்பானைகளின் தயாரிப்பாளர்களுக்கான சீனாவின் பாரிய சுற்றாடலுக்கு நட்புறவான பழங்கள் மற்றும் காய்கறிகளின் உற்பத்தியாளரான செனொங் குழுவின் முகாமைத்துவத்துடன் கூட்டங்களை ஏற்பாடு செய்தது.

**அக்குவாராமா 2013 சர்வதேச மீன் போட்டி – இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கான 30 வெகுமதிகள்**

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை சிங்கப்பூரில் இடம் பெற்ற அக்குவாராமா 2013 சர்வதேச மீன் கண்காட்சியில் 17 ஏற்றுமதியாளர்களுடன் இலங்கையின் காட்சிப் பிரதேசத்தினை ஏற்பாடு செய்தது.

அக்குவராமா 2013 உலகின் பாரிய அலங்கார மீன் போட்டியில், இலங்கை மீன் உற்பத்தியாளர்கள் 30 வெகுமதிகளை வெற்றி கொண்டனர்.

இலங்கை முதன் முறையாக தங்கமீன் (கோல்ட்பிஷ்), குராமி மற்றும் நீரியல் மரங்களின் தாங்கிகளுக்கு வெகுமதிகளைப் பெற்றுக் கொண்டது. இரண்டு வெற்றியாளர்களாக விவசாய வலயங்களின் கருத்திட்டங்களின் கீழ் ஏற்றுமதி அபவிருத்திச் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பொலன்னறுவை அலங்கார மீன் கருத்திட்டத்தின் அங்கத்தவர்கள் விளங்குகின்றனர். நிறைவேற்றப்பட்ட கட்டளைகள் - ஐக்கிய அமெரிக்க டொலர் 60,000. பேச்சு வார்த்தைகள் இடம் பெற்று வருபவைகள் - ஐக்கிய அமெரிக்க டொலர் 10,000.

**உள்நோக்கிய கொள்வனவு தூதுவர் குழுக்கள்**

- பண்டாரநாயக்கா ஞாபகர்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2013 ஆகஸ்ட் மாதத்தில் இடம் பெற்ற உணவு சார்ந்த கண்காட்சிக்கு இணைவாக ஐக்கிய அராபிய இராச்சியத்துக்கான உள்நோக்கிய கொள்வனவு தூதுவர் குழுவை எற்பாடு செய்தது. சொய்த்தரம் மாலா மற்றும் அல் மாயா போன்ற அங்கீகரிக்கப்பட்ட நவீன குளிரூட்டப்பட்ட சந்தைகளிலிருந்து 06 கொள்வனவாளர்கள், உணவு சார் கண்காட்சிக்கு விஜயம் செய்தனர். தொழிற்சாலைகளுக்கான விஜயங்களும் ஏற்பாடு செய்யப்பட்டன.
- 2013 பேசட்ஸ் சர்வதேச இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் கண்காட்சிக்கு விஜயம் செய்வதற்கு ரஷ்யா, சீனா, மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் 3 கொள்வனவாளர் தூதுவர் குழுக்களை ஏற்பாடு செய்தது.
- 2013 காலணி மற்றும் தோல் கண்காட்சிக்கு இணைவாக போலந்து, ஜோர்தான், தென் ஆபிரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளிலிருந்தான இறக்குமதியாளர்களுக்கான விஜயங்களை ஏற்பாடு செய்தது.
- 2013 செப்தெம்பர் மாதம் 04 ஆம் திகதி நெதர்லாந்திலிருந்து தூதுவர் குழுவொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. 15 அங்கத்தவர்களை உள்ளடக்கிய தூதுவர் குழுக்களுக்கான வர்த்தக அரங்கு ஒன்றும் மற்றும் பீ2பீ குழுக்களும் ஏற்பாடு செய்யப்பட்டன.
- 2013 பெப்ரவரி மாதம் (08 - 10 ஆம் திகதி வரை) தேயிலை, மூலிகைகள், மற்றும் மட்பாண்டத்துறைகளில் தொடர்புகளை உருவாக்குவதற்கான சாத்தியங்களை ஆய்வு செய்வதற்கான போலந்திலிருந்து 3 அங்கத்துவத் தூதுவர் குழுக்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

- இந்தியாவிலுள்ள பெலரஸ் தூதரகத்தின் ஆதரவுடன் பெலரஸிலிருந்து 10 அங்கத்துவ தூதுவர் குழுக்கள் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டதோடு, 40 வர்த்தகக் கம்பனிகளுடன் வர்த்தகத் தொடரும் ஏற்பாடு செய்யப்பட்டது.
- ஆயுர் வேத மற்றும் ஆயுர் வேத உற்பத்திப் பொருட்களில் வர்த்தகத் தொடர்புகளை உருவாக்குவதற்கு 2013 ஜுலை ஆயுர்வேத எக்ஸ்போவுக்கு இணைவாக தென்னாபிரிக்காவிலிருந்து உள்நோக்கிய 3 அங்கத்துவ தூதுவர் குழுக்களை ஏற்பாடு செய்தது. ஐந்து (05) வர்த்தகக் கூட்டங்களும், இரண்டு (02) தொழிற்சாலை விஜயங்களும் ஏற்பாடு செய்யப்பட்டன.
- வர்த்தகத் தொடர்புகளை உருவாக்குவதற்கு (2013 ஆகஸ்ட் மாதம் 26 – 31 ஆம் திகதி வரை) இஸ்ரேலிருந்து 25 உள்நோக்கிய தூதுவர் குழுக்களை ஏற்பாடு செய்தது.
- இலங்கைக்கு விஜயம் செய்த இலங்கைக்கான கௌரவ பல்கேரிய உதவித் தூதரின் (இறக்குமதியாளர்) தொழிற்சாலைகளுக்கான விஜயங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. உள்ளடக்கப்பட்ட துறைகளாக மட்பாண்டம்,போசலீன், காலுறைகள், இறுக்கமான உடைகள், நவீன வடிவமைப்பிலான ஆடைகள், தும்பு நாரினாலான உற்பத்திப் பொருட்கள், மற்றும் ஆரோக்கிய உடல் நலக் குளிப்பு தொடர்பான உற்பத்திப் பொருட்கள், ஆகிய துறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
- நெதர்லாந்திலிருந்து வருகை தரும் தூதுவர் குழுவொன்றுக்கான வர்த்தக அரங்கு மற்றம் பீ2பீ கூட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டன.
- 2013 மே மாதம் 5 – 10 ஆம் திகதி வரை ஐக்கிய அமெரிக்காவின் லாஸ் வெகாஸில் 04 இலங்கை இறப்பர் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியாளர்களுக்கான ஒன்றுக்கு ஒன்று வர்த்தகக் கூட்ட நிகழ்ச்சித் திட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.
- இலங்கைச் சுற்றுலா தொடர்பான பாரிய அளவிலான நிகழ்ச்சித் திட்டம் இந்தியாவின் பங்களூரில் 2013 பெப்ரவரி மாதம் 22- 24 ஆம் திகதி வரையிலும், மும்பாயில் மே மாதம் 17 – 19 ஆம் திகதி வரையிலும் இந்தியாவிற்கான, பங்களூர், மும்பாய், டில்லி ஆகிய பிரதேசங்களில் இலங்கை நாட்டின் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.
- அதி மேதகு ஜனாதிபதியின் ஜப்பானிற்கான விஜயத்துக்கு இணைவாக இம்பீரியல் ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களைக் காட்சிப்படுத்தும் நிகழ்வில் 12 இலங்கை ஏற்றுமதிக் கம்பனிகளின் பங்கேற்பினை ஏற்பாடு செய்தது.
- 2013 செப்தெம்பர் மாதம் 24 – 27 ஆம் திகதி வரைசீனாவில் 34 அங்கத்துவ சீனத் தூதுவர் குழுக்களுக்கும் மற்றும் 100 இலங்கை கம்பனிகளுக்கும் இடையில் பீ2பீ கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.
- 2013 செப்தெம்பர் மாதம் 23– 29 ஆம் திகதி வரைசீனாவில் 17 பிரதிநிதிகளுக்கான தொழில்நுட்ப மேம்பாட்டுத் தூதுவர் குழுவும் மற்றும் 7 இலங்கை ஆடை ஏற்றுமதியாளர்களுக்கான பீ2பீ கூட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டன.
- 2013 அக்டோபர் மாதம் 6–12 ஆம் திகதி வரைபெல்ஜியம், ஒஸ்ட்ரியாமற்றும் சிலோவாக் குடியரசு ஆகிய நாடுகளுக்கான 08 அங்கத்துவ வர்த்தக் தூதுவர் குழுக்களை (அமைச்சர்களை உள்ளடக்கிய தூதுவர் குழுக்கள்) ஏற்பாடு செய்தது.


- செக் குடியரசுக்கான 16 அங்கத்துவ சீனத் தூதுவர் குழுக்கள் (அமைச்சர்களை உள்ளடக்கிய தூதுவர் குழுக்கள்) ஏற்பாடு செய்யப்பட்டதோடு, அவை 2013 மார்ச் மாதம் 27- 30 ஆம் திகதி வரை போலந்துக்கும் நீடிக்கப்பட்டது.

## 5] விவசாய உற்பத்திப் பொருட்கள், கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள் மற்றும் ஏற்றுமதிச் சேவைகள் போன்றவற்றிற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான நிகழ்ச்சித் திட்டங்கள்

2013 ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பிரிவில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை விவசாயம், கடற்றொழில் மற்றும் கைத்தொழில் துறைகளின் அபிவிருத்திக்கான நிகழ்ச்சித் திட்டத் தொடர்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு சில நடவடிக்கைகளின் முன்னேற்றச் செயலாற்றம் கீழே சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன:

இலங்கைக் கறுவாவிற்கான இலச்சினையிடல்

### உலக அறிவு சார் சொத்துக்கள் அலுவலகத்துடன் (WIPO) "தூய சிலோன் கறுவா"வின் வர்த்தகக் குறியைப் பதிவு செய்தல்




இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, சர்வதேச சந்தையில் "தூய சிலோன் கறுவாவை" உலகளாவிய இலச்சினையாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கை

ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் நாடுகள் போன்ற பிரதான சந்தைகளில் வர்த்தக இலச்சினையின் பதிவினைப் பூர்த்தி செய்துள்ளதோடு, உலக அறிவு சார் சொத்துக்கள்அலுவலகத்தில் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது

தூய சிலோன் கறுவாவினை இலச்சினையிடலும் மற்றும் இலக்காகக் கொள்ளப்பட்ட சந்தைகளில் உலகளாவிய இலச்சினையொன்றாக தூய சிலோன் கறுவாவை இலச்சினையிடலும், மற்றும் மேம்படுத்தலுமானது, இலங்கைக் கறுவாவின் பிரதான பண்புகளைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்கும் மற்றும் போட்டி ரீதியான நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காக கெசியா போன்ற விலை குறைந்த பிரதியீடுகளிலிருந்து இலங்கைக் கறுவாவை வேறுபடுத்திக் காட்டுவதும் மிக முக்கியமானதாகும். அதன் பிரகாரம், இலங்கைக் கறுவாவானது, பல்வேறு இயல்புடைய பண்புகளின் சேர்மானங்களைப் பிரதிபலிக்கும் "தூய சிலோன் கறுவா" எனும் பெயரைக் கொண்ட வியாபாரக் குறியைக் கொண்ட உற்பத்திப் பொருளொன்றாக சர்வதேச சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது, மெக்சிகோ, பேரு, மற்றும் கொலம்பியா போன்ற ஏனைய போட்டிச் சந்தைகளிலும் "தூய சிலோன் கறுவா" வர்த்தகக் குறியை பதிவு செய்வதற்கான விண்ணப்பப்பத்திரத்தினை தாக்கல் செய்துள்ளது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது, ஏற்றுமதி செய்யக் கூடியகறுவா உற்பத்திப் பொருட்களுக்கான "தூய சிலோன் கறுவா" எனும் இலச்சினைப் பெயருடன் இணைக்கப்பட்ட சிறப்பு வாய்ந்த சிங்க இலச்சினையை வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளது.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஏனைய சேர்மானப் பெயர்களான " சிலோன் கறுவா""இலங்கைக் கறுவா" மற்றும் சிறீலங்கா குருந்து" போன்றவற்றின் ஊடாக "சிலோன் கறுவா" என்ற பெயரின் உடமையை / பொறுப்புடமையை வைத்திருப்பதற்கும், சிலோன் கறுவாவைப் பாதுகாப்பதற்கும் மற்றும் மேம்படுத்துவதற்கும் பொருத்தமானதும் / மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. புவியியல் அறிகுறிகளின் கீழான பாதுகாப்பை நோக்கிய முதலாவது படிமுறையாக சிலோன் கறுவாவின் சான்றுப்படுத்தும் குறியானது, இலங்கையின் தேசிய அறிவார்ந்தசொத்துக்களின் நிறுவனத்துடன் இணைந்து ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற ஏனைய சர்வதேச சந்தைகளில் சிலோன் கறுவாவிற்கான புவியியல் அறிகுறியைப் பெற்றும் கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. சர்வதேச சந்தைகளில் கிடைக்கக் கூடிய ஏனைய கறுவா மற்றும் கெசியா போன்ற கறுவாக்களுக்கு எதிராக பாதுகாப்பதற்கு சிலோன் கறுவாவிற்கு அதிகளவிலான பாதுகாப்பை புவியியல் ரீதியான அறிகுறி வழங்குகின்றது.

**"கறுவாவிற்கான கட்டாய முன் கண்காணிப்புத் திட்டம்" தொடர்பான மாநாடு**

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது, 120 நபர்களின் பங்கேற்புடன்கறுவா ஏற்றுமதிகளுக்காக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய"கறுவாவிற்கான கட்டாய முன் கண்காணிப்புத் திட்டம்" தொடர்பாக இலங்கைத் தர நியமங்கள் நிறுவனம் மற்றும் ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் ஆகியனவற்றுடன் இணைந்து விழிப்பூட்டல் நிகழ்ச்சித் ிட்டமொன்றினை ஏற்பாடு செய்தது.

**பெறுமதிச் சங்கிலி விருத்தி நிகழ்ச்சித் திட்டம் – கறுவாப் பட்டை அகற்றும்பயிற்சி நிறுவனத்துடன் தொடர்புடைய வேலைகளை ஒருங்கிணைத்தல் –**

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை,வாசனைத் திரவியங்கள் சபை மற்றும் ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி நிறுவனம் (யுனிடோ) ஆகியனவற்றுடன் இணைந்து மேற்கொள்ளப்பட வேண்டிய "இலங்கையின் கறுவாவின் பெறுமதிச் சங்கிலியின் பொருத்தத் தன்மை, உற்பத்தித் திறனின் இயலளவு, மற்றும் போட்டித் தன்மையை மேம்படுத்தும்" கருத்திட்டத்தின் கீழ் "கறுவாப் பயிற்சி நிறுவனத்தினை" ஸ்தாபிப்பதற்கான கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கு இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்

சபைக்கு "தேசிய வரவு செலவுத்திட்டம் 2013 அங்கீகாரத்தினை வழங்கியுள்ளது. கட்டடத்தினை நிர்மாணிப்பது தொடர்பான வேலைகளை ஆரம்பிப்பதற்கு வரையறுக்கப்பட்ட கறுவா பயிற்சிக் கல்லூரியுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

### அலங்கார மீன் ஏற்றுமதியாளர்கள் / மறைமுகமான ஏற்றுமதியாளர்களுக்கான தொற்றுத் தடை காப்பு / நிறுத்தி வைக்கும் வசதிகளை விருத்தி செய்வதற்கான உதவித்திட்டம்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை இத்துறையின் தொற்றுத் தடை காப்பு / நிறுத்தி வைக்கும் வசதிகளை விருத்தி செய்வதற்கு தேசிய வரவு செலவுத்திட்டம் 2013 இனால் அங்கீகரிக்கப்பட்ட நிதி உதவித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. ஏற்றுமதிச் சந்தை ஒருமுகப்படுத்துவதற்கும் மற்றும் விரிவடையச் செய்வதற்கும் இறக்குமதி செய்யப்படும் நாடுகளினால் விஷேடமாக உயிர்ப்பிராணிகள் தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்ட விதிகளையும், மற்றும் ஒழுங்கு விதிகளையும் கடைப்பிடித்தல் முக்கியமானதாகும். இவ்வசதிகளின் ஸ்தாபிப்புடன் தொற்றுத் தடைகாப்புச் செயன்முறைகளை பின்பற்றுவதானது, ஏற்றுமதி செய்வதற்கு முன்னர் ஏற்றுமதியாளர்கள் அவற்றைச் சிறந்த ஆரோக்கிய நிலைமையினைப் பேணக் கூடியதாக உள்ளது. தெரிவு செய்யப்பட்ட கம்பனிகள், உச்சத் தொகை ரூபா 1.5 மில்லியனுக்கு உட்பட்டு செலவை ஈடு செய்யும் அடிப்படையில் அவர்களது மீன் பண்ணைகளின் அபிவிருத்தியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 50 சதவீத செலவினை கோருவதற்கு அருகதையுடைவர்களாவர். 2013 இல் அண்ணளவாக 26 கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் விளம்பரப்படுத்தப்பட்டதோடு, அது தொடர்பாக 29 பிரேரணைகள் கிடைக்கப் பெற்றன. பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டதோடு, 26 கருத்திட்டங்களுக்குமான ஆரம்ப விஜயங்கள் கணிப்பீட்டிற்காக நியமிக்கப்பட்ட குழுவுடன் நடாத்தப்பட்டது. இக்குழுவினால் 14 கருத்திட்டப் பிரேரணைகள் மதிப்பீடு செய்யப்பட்டன.

### இலங்கையின் நீலக்கல்லிற்கான (சிலோன் சபயர்)தனித்தன்மையினை குறிப்பிட்டுக் காட்டுவதன் மூலம் இலங்கையின் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களை மீள் நிலைப்படுத்தல்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது, இலங்கை இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகார சபையுடன் ஒன்றிணைந்து இலங்கையின் நீலக்கல்லிற்கான (சிலோன் சபயர்) தனித்தன்மையினை குறிப்பிட்டுக் காட்டுவதன் மூலம்இலங்கை இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு மேம்பாட்டுப் பிரச்சாரங்களை ஆரம்பித்தது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் துறையை நம்பிக்கைக்குரிய துறையாக இனங்கண்டுள்ளதோடு, 2015 ஆம் ஆண்டளவில் இத்துறையின் ஏற்றுமதி வருவாயாக ஐக்கிய அமெரிக்க் டொலர் 1 மில்லியன் அடையப்படுவதற்குத் தயார்

செய்யப்பட்டுள்ளது. உயர் தரத்தினை உடைய நீலக்கல்லின் (சபயர்) மூலமொன்றாக இலங்கை தொடர்பாக நடைமுறையிலுள்ள, சாத்தியமான நுகர்வோர்களுக்கிடையில் விழிப்பூட்டலை அதிகரிப்பதற்கும், அவர்களின் மனதில் இரத்தினக்கற்களின் பெறுமதியை வலுப்படுத்தவும் மேம்பாட்டுச் சாதனங்களுள் ஒன்றாக, இலத்திரனியல் - செய்திகள் வெளியிடப்பட்டதோடு, சர்வதேச கைத்தொழிலாளர்களுக்கிடையில் விநியோகிக்கப்பட்டன. இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட இரத்தினக்கற்களின் அளவினை அதிகரிப்பதற்கு வழிவகுக்கக் கூடிய சிலோன் நீலக்கற்களுக்கான (சபயர்) கேள்வியை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரச்சாரத்தின் பிரதான சேர்க்கைகளுள் ஒன்றாக,திருமண ஒப்பந்த மோதிரங்களுக்கான பிரதான இரத்தினக்கல்லொன்றாக இலங்கைநீலக்கற்களுக்குரிய (Blue Sapphire) அம்சங்களைக் கொண்ட 2011 இல் ரோயல் வெடிங்கிற்கு இணைவாக சர்வதேச ஊடகத்திற்குத் தகவல்களைப் பரப்புவதற்கு சிலோன் நீலக்கற்களுக்கான (Ceylon Sapphires) இணையத்தளமொன்றினை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை இலங்கை இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகார சபையுடன் இணைந்து அபிவிருத்தி செய்தது. சர்வதேச வாடிக்கையாளர்களுக்கான சிலோன்நீலக்கற்களுக்கான (Ceylon Sapphires) பிரதான தகவல் மூலமாக இவ்விணையத் தளம் விளங்கியது. இவ்விணையத்தளம் மீள வடிவமைக்கப்படவுள்ளதோடு இலங்கை இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணக் கைத்தொழிலை மேம்படுத்துவதனை ஆரம்பிக்கவும் உள்ளது

.

### சர்வதேச இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண வர்த்தகக் கண்காட்சி [FACET 2013]



ஏற்றுமதி அபிவிருத்திச் சபை இலங்கை இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணச் சங்கத்துடனும், மற்றும் தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகார சபையுடனும் ஒன்றிணைந்து 2013 ஆகஸ்ட் மாதம் 29 ஆம் திகதியிலிருந்து செப்தெம்பர் மாதம் 01 ஆம் திகதி வரை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 23 ஆம் சர்வதேச இரத்தினக்கற்கள் மற்றும்ஆபரண வர்த்தகக் கண்காட்சியை [FACET 2013] ஏற்பாடு செய்தது.

ஏற்றுமதி அபிவிருத்திச் சபை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களை மேம்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குவதற்கு நாடு பூராவுமுள்ள 18 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கான விஷேட கண்காட்சித் தளமொன்றை ஏற்பாடு செய்தது. மேலும், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, 11 சீனர்கள், 03 ரஷ்யர் மற்றும் 02 அமெரிக்கர் உள்ளடங்கலாக வர்த்தகத் தூதுவர் குழுக்களை ஏற்பாடு செய்தது.

**இறப்பர் உற்பத்திப் பொருட்களுக்கான தரமான சான்றுப்படுத்தலை பெற்றுக் கொள்வதற்கும், மற்றும் இலங்கையில் இல்லாத தரமான பரிசோதனைகளை மேற்கொள்வதற்குமான உதவித் திட்டம்**

இலங்கை SOLEDEAL, CONTINENTANAL, WONDER GRIP, MAPA, SAFETY WORK போன்ற இன்னோரன்ன சர்வதேச இலச்சினைகளுக்கு வழங்கும் உலக தரத்திலான இறப்பர் உற்பத்தித் தயாரிப்பாளராக எழுச்சி பெற்றுள்ளது. தரம் மற்றும்ஏற்புடைமைக்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ள நற்பெயரைப் பாதுகாப்பதற்கு ஏற்றுமதியாளர்கள் நியமங்களுடன் இணக்கப்பாடுடையனவாக இருக்க வேண்டியதோடு, இலங்கையில் பெற்றுக் கொள்ள முடியாத ஒரு சில சான்றுப்படுத்தல்களையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

எனவே, இறப்பர் உற்பத்திப் பொருட்களின் ஏற்றமதியாளர்களுக்கு உதவும் நோக்குடன் தற்போது இலங்கையில் பெற்றுக் கொள்ள முடியாத சான்றுப்படுத்தல்களை பெற்றுக் கொள்வதற்கான உதவித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கான பூர்வாங்க வேலைகளை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மேற்கொண்டுள்ளது. இது பெறுமதி சேர்க்கப்பட்ட இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்களின் உற்பத்தித் திறனையும் மற்றும் தரத்தினையும் சர்வதேச சந்தையின் தேவைப்பாடுகளுடன் உடன்படக் கூடிய வகையில் மேம்படுத்துவதற்கு வழிவகுக்கக் கூடும்.

**காலணி மற்றும் தோல்களுக்கான கண்காட்சி - 2013**

ஏற்றுமதி அபிவிருத்திச் சபை,கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு,இலங்கைக் காலணிகள் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்களின் சங்கம் ஆகியனவற்றடன் ஒன்றிணைந்து, 2013 பெப்ரவரி மாதம் 08 – 10 ஆம் திகதி வரை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் 5 ஆவது காலணிகள் மற்றும் தோல்களுக்கான கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இத்திறப்பு விழாவின் போது கௌரவ பெசில் ராஜபக்ஷ பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.




இக்கண்காட்சியானது, கைத்தொழிலின் ஆக்கபூர்வத் தன்மையையும் மற்றும் திறன் வாய்ந்த உள்நாட்டு நிபுணர்களை இனங்காணவும், பொருத்தமான ஒரு தளமாக விளங்கியது. இக்கண்காட்சியின் பிரதான நோக்கம் சர்வதேச ரீதியாக இலங்கையின் காலணிகள் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்களுக்கான உறுதியான ஒரு நன்மதிப்பினைக் கட்டியெழுப்புவதாகும். விஷேடமாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஏற்றுமதியாளர்கள் அவர்களது உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்துவதற்கான வாய்ப்பொன்று வழங்கப்பட்டுள்ளது.

காலணிகள், பயணப் பொருட்கள்,மூலப்பொருட்கள்,இயந்திரங்கள் மற்றும்ஏனைய தொடர்புடையசேவைகள் போன்றனவற்றைக் காட்சிப்படுத்தும் 214 இற்கும் அதிகமானகொட்டகைகள்இக்கண்காட்சியில்உள்ளடக்கப்பட்டிருந்தன. துணைப்பொருட்கள், மற்றும் உதிரிப் பாகங்களின் உள்ளூர் தயாரிப்பாளர்களுக்கும் அவர்களது உற்பத்திப் பொருட்களைக் காட்சிப்படுத்துவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வின் விஷேட பண்புகளாக வடிவமைப்புக் கண்காட்சியும், சிறந்த கண்காட்சிக் கொட்டகையின் போட்டியும் விளங்கின. எதிர்காலதிறமையுள்ள இலங்கை வுடிவமைப்பாளர்களை இனங்காண்பதற்காக வடிவமைப்பாளர் விருது விழாவும், ஏற்பாடு செய்யப்பட்டது. விருதுகள் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களினால் வழங்கப்பட்டன.








**ஏற்றுமதிச் சேவைகள்**

- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ஐசீடீ)/வர்த்தகச் செயன்முறை பணி ஒப்படைப்பு (பீபீஓ) துறை – மத்திய மாகாணத்திலுள்ள 10 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கம்பனிகளுக்கு தகவல் தொழில்நுட்பப் பூங்கா நகரத்திற்கான வெளிப்படுத்துகை விஜயமொன்றும், மாகாணங்களிலிருந்து தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ஐசீடீ)/வர்த்தகச் செயன்முறை பணி ஒப்படைப்பு (பீபீஓ) ஏற்றுமதியாளர்களை உருவாக்குவதற்கு கண்டியில் மாகாண அலுவலகமொன்றும் SLASSCOM உடன் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது.
- 2013 ஆம் ஆண்டு காலப்பிரிவில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ஐசீடீ)/வர்த்தகச் செயன்முறை பணி ஒப்படைப்பு (பீபீஓ) துறையினால் ( ஏற்றுமதிப் பெறுமதி அளவையினால்)

உருவாக்கப்பட்ட ஏற்றுமதிகளின் பெறுமதிகளை உறுதிப்படுத்துவதற்கு உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- ஏற்றுமதிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்குப் பொருத்தமான கம்பனிகளைத் தெரிவு செய்வதற்காக சீபீஐ (CBI) யின்ஆலோசனையுடன் பதினொரு மென்பொருள் கம்பனிகள் விஜயம் செய்தன.
- இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ஐசீடீ)/வர்த்தகச் செயன்முறை பணி ஒப்படைப்பு (பீபீஓ) துறைக்கு இலச்சினை உபாயம் ஒன்றை உருவாக்குப் பொருத்தமான ஆலோசனையாளரை தெரிவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## உத்தியோகபூர்வ சேவைகள்

- ஜெனீவா தகவல் தொழில்நுட்ப தொடர்பாடலுடன் இணைந்து சுகாதாரச் சுற்றுலா தொடர்பான அளவை ஒன்றை ஆரம்பித்தது.
- 2013 ஆயுர்வேத எக்ஸ்போவில் சுகாதார சேவைகள் ஏற்றுமதிகளை மேம்படுத்தும் நோக்குடன் இலங்கை ஆயுர்வேதம் தொடர்பான சஞ்சிகை வெளியிடப்பட்டது.
- நிர்மாணத் துறையின் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட ஒப்பந்ததாரர்களின் குழுவொன்றினை ஸ்தாபிப்பதற்கு நிர்மாணத் துறைச் சங்கத்துடன் இணைந்து செயற்பட்டது.

## இலத்திரனியல் துறை

- இலத்திரனியல் ஏற்றுமதியாளர்களுக்கு இடையில் உலகளாவிய சிறந்த நடைமுறைகள் தொடர்பான விழிப்பூட்டலை அதிகரிப்பதற்கும், இலத்திரனியல் ஏற்றுமதித் துறையின் இயலளவை விருத்தி செய்வதற்கும் ஐபீசீ தொழில்நுட்பக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

## ஏனைய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

- பதிவு செய்யப்பட்ட தேயிலைத் தயாரிப்பாளர்கள், உற்பத்தியாளர்கள் / ஏற்றுமதியாளர்களுக்கான தரப்படுத்தல் பிரதேச இயலளவு அபிவிருத்தியின் ஊடாக உதவி வழங்குவதற்காக நான்கு (04) கம்பனிகள் தெரிவு செய்யப்பட்டன.
| ஊழியர் நம்பிக்கை நிதிக் கொடுப்பனவு | 199,490.30 | 202,750.29 |
| ஊழியர்களின் இறுதிக் கொடுப்பனவு | 61,714.46 | 64,244.46 |
| கணக்காய்வுக் கட்டணக் கொடுப்பனவு | 2,487,075.00 | 1,887,075.00 |
| விலை மனு கோரலுக்கான திருப்பிச் செலுத்தக் வேண்டியு பாதுகாப்பு வைப்பு | 2,500.00 | 6,166.68 |
| திருப்பிச் செலுத்தும் வைப்புகள் | 52,000.00 | - |
| மாற்றப்படாத காசோலைகள் | 1,051,078.05 | 1,021,281.00 |
| ஏனைய அட்டுறு செலவுகள் | 57,122,377.00 | 46,197,504.25 |
| விவசாய வலய கொடுப்பனவிற்கான ஏற்பாடு | 1,092,000.00 | 11,218,536.00 |
| | **63,768,000.39** | **62,335,549.84** |

**(20)** **வங்கி மேலதிகப் பற்று**

| | | |
|---|---|---|
| இலங்கை வங்கி - லேக் வியூ | 17,148,432.07 | 55,093,612.35 |
| இலங்கை வங்கி - காலி | 648.88 | 648.88 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | - | 795,842.30 |
| இரத்தாக்கப்பட்ட காசோலைகள் | - | - |
| | **17,149,080.95** | **55,890,103.53** |

**(21)** **முன்னைய வருடச் சீராக்கம்**

ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் அபிவிருத்தி ஹோல்டிங் (தனியார்) நிறுவனத்தில் இருந்து பங்கு உரிமையின் சீராக்கம் செய்யப்பட்டது

## 31.12.2013ல் முடிவடைந்த ஆண்டுக்காள

## <u>நிதி அறிக்கைக் குறிப்புகள்</u>

(1) இலங்கை கணக்கீட்டு நியமம் 39ன் தேவைப்பாட்டிற்கிணங்க சேத இழப்பிற்காக உரிமைப் பங்குகள் பரீட்சிக்கப்பட்டன. இதற்கிணங்க 1.1.2011ல் ரூபா 31698150 தொகை செய்த இழப்பு ஏற்பாட்டுத் தொகையாகப் பதிவழிக்கப்பட்டது.

(2) (2.1) சுங்கத் திணைக்கள பிரதம சேகரிப்பாளரினால் திறைசேரியிலிருந்து வசூலிக்க வேண்டிய தொகையானது இலங்கை கணக்கீட்டு நியமம் 39ன் தேவைப்பாட்டிற்கிணங்க சேத இழப்பிற்காகப் பரீட்சிக்கப்பட்டது. இதற்கமையவாக 1.1.2011ல் சேத இழப்பிற்கான ஏற்பாட்டுத் தொகையான ரூபா 468742448.83 சிபாரிசு செய்யப்பட்டது.

(2.2) ஊழியர் கடன்

இலங்கை கணக்கீட்டு நியமம் 39 ற்கிணங்க் ஏதாவது சேத இழப்பை அமுலில் உள்ள வட்டி வீதத்திலிருந்து கழித்து, ஊழியர் கடன் சிபாரிசு செய்யப்படுகிறது. ஊழியர் கடனுக்கு இணங்க 1.1.2011ல் வெளிநிற்கும் தொகையானது தேய்வுக் கிரயத்திற்கு அமைய அளவிடப்பட்டது. இதற்கிணங்க ஊழியர்களுக்கான முற்பணச் செலவும் ஐகுசுளு சீராக்கக் கணக்குத் தொகைகளுமாக ரூபா 16060711.67 க்கு அதிகாரம் அளிக்கப்பட்ட ஏட்டுப் பெறுமதிக்கேற்ப உருவாக்கப்பட்டது.

*நிதிக்கூற்றில் காட்டப்பட்டுள்ள மீதிகள் முறையே பின்வருமாறு,*

**(2.2.1)** **ஊழியர் கடன் தொகையிலிருந்து IFRS சீராக்கக் கணக்கு மீதி கழிக்கப்பட்டது. இதற்கமைவாக ஐந்தொகையில் ஊழியர் கடன் நியாயமான பெறுமதியைத் தற்போது காட்டுகிறது.**

| | |
|---|---|
| ஊழியர் கடன் | 47,487,670.34 |
| IFRS சீராக்கங்கள் | (16,060,711.67) |
| | 31,426,958.67 |

**(2.2.2)** **ஊழியர் முற்பணக் கிரயமானது நடைமுறைச் சொத்துக்களின் கீழ் சீராக்கமாகக் காட்டப்படுகின்றது.**

| | |
|---|---|
| முற்பண ஊழியச் செலவு | 16,060,711.67 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல. / My No. } சீ2/எப்/சஅபி/1/13/27

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2014 திசெம்பர் 29

தலைவர்
இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சந்தையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2014 யூலை 16 ஆந் திகதி சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும்

நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம், நிதிக்கூற்றுக்களில் ஒப்பீட்டு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் ஒப்பீட்டுத் தொகைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அலுவலகக் கட்டிடத் தொகுதியை நிர்மாணிக்கும் நோக்கில் சபையும் அபிவிருத்தி வங்கியொன்றுடன் ஒருங்கிணைந்து கூட்டுத் தனியார்

கம்பனியில் ரூபா 1,439,656,910 தொகையான பிடித்துவைத்தல் இலாபத்தினை அடிப்படையாகக் கொண்ட முதலீட்டின் நியாயப் பெறுமதி அதிகரிப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 418,476,859 தொகை கணக்கீடு செய்யப்படுகையில் இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் பின்னோக்கி மீள் வெளியீடாக கணக்கீடு செய்யப்படுவதற்குப் பதிலாக முன்னைய ஆண்டுச் சீராக்கமாக மீளாய்வாண்டின் திரண்ட இலாபத்திற்குச் சீராக்கப்பட்டிருந்தது.

(இ) பூச்சியத் தேறிய பெறுமதியைக் கொண்டிருந்த சகல மோட்டார் வாகனங்களும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீள் பெறுமதியிடப்பட்டிருந்தன. இலங்கை கணக்கீட்டு நியம இல. 16 இன் பிரகாரம், பெறுமானத்தேய்விற்கான ஏற்பாட்டு விகிதம் பயனுள்ள ஆயுட் காலத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக பெறுமானத்தேய்விற்கான 02 ஏற்பாடு அதாவது 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மோட்டார் வாகனத்திற்காக 20 சதவீதமும், 10 ஆண்டுகளுக்குக் குறைவான மோட்டார் வாகனத்திற்காக 10 சதவீதமுமாக மீள்பெறுமதியிடலுக்கு முன்னர் நிலவிய பயனுள்ள ஆயுட்காலத்தை அடிப்படையாகக் கொண்டு காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) சபைக்கு வெளித்தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் வெவ்வேறாக இனங்காணப்பட்டிராததுடன் இலங்கை கணக்கீட்டு நியமம் 20 இன் பிரகாரம் அச் சொத்துக்களுக்குரிய பெறுமானத்தேய்விற்கான ஏற்பாட்டிற்குச் சமமான பெறுமதி குறைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடனில் பெறவேண்டிய வட்டிக்காக இலங்கை கணக்கீட்டு நியமம் 36 இன் பிரகாரம் தாக்கமளிக்கும் ஏற்பாடுகள் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்களின் மூலம் அத்தகைய கணக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டுக் கொள்கைக் குறிப்புகள் இல. 2.18 இன் மூலம் நிகழத்தக்க பொறுப்புகள் தொடர்பாகக் காண்பிக்கப்பட்ட

போதிலும் 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது நிறுவனத்திற்கு எதிராகவும் நிறுவனத்தாலும் தொடரப்பட்டிருந்த 06 வழக்குகள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் பிரகாரம் நிகழத்தக்க பொறுப்புகளும் நிகழத்தக்க சொத்துக்களும் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(எ) முன்னுரிமைப் பங்குகள் மற்றும் சாதாரண பங்குகளில் முதலீடு செய்யப்படுகையில் பெறுமதி குறைந்து செல்வதற்காக 2012 ஆம் ஆண்டின் போது ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 122,822,417 தொகையான பெறுமதி 2013 ஆம் ஆண்டின் போதும் ஒதுக்கமாகக் காண்பிக்கப்பட்டிருந்தன. ஆகையால் இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய முதலீடுகளின் காலக்கழிவு மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய அனுசரணையாளர் மற்றும் விற்பனைக் கூடங்களின் வருமானம் ரூபா 3,180,000 தொகை நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தன.

(ஆ) உத்தியோகத்தர்களின் சேவைக் காலம் சரியாகக் கணிப்பிடப்பட்டிராமையால் மீளாய்வாண்டின் போது பணிக்கொடைச் செலவினம் ரூபா 302,097 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டுகளின் போதும் செலுத்தப்பட்டிருந்த ரூபா 5,324,516 தொகையான முற்பணங்களுக்குரிய சேவைகளும் வழங்கல்களும் முடிவுற்றிருந்த போதிலும் தொடர்ந்தும் அப் பணம் முற்பணமாகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான செலவினம் அத் தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பொறுப்புகள் மற்றும் சொத்துக்கள் கணக்குகளின் கீழ் காண்பிக்கப்பட்ட முறையே ரூபா 11,079,248 தொகையும் ரூபா 622,595 தொகையுமான

அசாதாரண வரவு மற்றும் செலவு மீதிகள் இனங்காணப்பட்டு தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிலையான சொத்து விற்பனையால் பெற்றுக்கொள்ளப்பட்ட நட்டம் ரூபா 14,952 தொகை குறைவாகவும் ரூபா 14,952 தொகையான சொத்து விற்பனை அதிகமாகவும் காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றுடன் உரித்தற்ற முன்னைய ஆண்டிற்கான சீராக்கங்களான ரூபா 418,476,859 தொகை இணைக் கம்பனிப் பெறுமதி அதிகரிப்பான ரூபா 47,862,116 தொகையும் அவ் இணைக் கம்பனியின் திரண்ட இலாப சீராக்கமான ரூபா 466,338,975 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதி மாற்றத்திற்குத் தாக்கமளிக்கும் வகையில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(எ) தொலைபேசிச் செலவினமான ரூபா 43,090 தொகையும், உபசாரச் செலவினமான ரூபா 2,020 தொகையும், மருத்துவ உதவிச் செலவினமான ரூபா 9,900 தொகையும், சட்டச் செலவினமான ரூபா 70,000 தொகையுமாக ரூபா 125,010 கூட்டுத்தொகை கட்டிட வாடகைச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் கட்டிட வாடகைக் கணக்கு அத் தொகையால் அதிகரித்தும் மேற்குறித்த ஒவ்வொரு கணக்குகள் அதே தொகையால் குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஏ) 2013 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்காக குருநாகல் மாகாண அலுவலகத்திற்காகச் செலுத்தப்பட வேண்டிய குத்தகை வாடகையான ரூபா 201,600 அட்டுறு செலவினமாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கடந்த ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட மீள்பெறுமதியீட்டு இலாபத்தொகையான ரூபா 100,000 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டமை 2013 இன் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிராமையால் அப் பெறுமதியால் மீள்பெறுமதியீட்டு இலாபமும் ஆதனங்கள், பொறி மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதி அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏற்றுமதியாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 5,878,112 தொகையான போதிலும் பட்டோலைகளின் படி இது ரூபா 4,282,832 ஆகக் காணப்பட்டமையால் வேறுபாடு ரூபா 1,595,280 ஆகக் காணப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கணக்கு விடயங்களிற்கு எதிராக வழங்கப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | | கணக்கு விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்பட்டிராத சான்று |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | (i) | முதலீடு | 88,410,377 | முதலீட்டுச் சான்றிதழ்கள் |
| | (ii) | சீடபிள்யூஜீ அம்பாந்தோட்டை 2018 தனியார் கம்பனிப் பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு | 8,000,000 | அமைச்சரவை அங்கீகாரம், நிதி அமைச்சரின் அங்கீகாரம் |
| (ஆ) | | தீர்க்கப்படாத முற்பணம் | 5,324,516 | முற்பணப் பதிவேடு, காலப்பகுப்பாய்வு |
| (இ) | | ஊவா பறணகம ஏற்றுமதித் தயாரிப்பு கிராமம் | 10,403,683 | மீதிகளின் உறுதிப்படுத்தலும் விபரமான பட்டோலைகளும் |

## [illegible] போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிராத கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபை, அதன் கண்டி பிரதேச அலுவலகத்தை நடாத்துவதற்காக அரச வங்கியொன்றிடமுள்ள ஓர் கட்டிடமொன்றைக் குத்தகையில் பெற்றுக்கொள்வதற்கு 2011 ஆகஸ்ட் 01 ஆம் திகதி அவ் வங்கியுடன் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக்கொண்டிருந்தது. உடன்படிக்கையின் படி குத்தகை உடன்படிக்கை காலம் 2013 யூலை 31 ஆம் திகதி பூர்த்தியடைந்திருந்ததுடன் 2014 யூலை 08 ஆம் திகதி வரையிலும் மீள வாடகைக் காலம் நீடிக்கப்படவோ அல்லது புதிய உடன்படிக்கை ஏற்படுத்தப்படாது 2013 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் 2013 திசெம்பர் 31 வரை வாடகையாக ரூபா 841,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஜாதிக சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டச் செயலகத்திற்குச் செலுத்தப்பட வேண்டியதாகக் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,009,740 தொகை அவ் அலுவலகத்தால் உறுதிப்படுத்தப்படாதும் முறையான அங்கீகாரம் இன்றியும் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

## சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் அதிகாரச்சட்டத்தின் 2(1) ஆம் பிரிவு | ஏற்றுமதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் கொள்கை அமுலாக்கலுக்கான தேசிய அபிவிருத்தி மன்றத்திற்கு 1992 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை 21 ஆண்டு |

| | | |
|---|---|---|
| | | காலம் கடந்திருந்த போதிலும் அச் சபை நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை** | |
| | XXIV ஆம் அத்தியாயத்தின் 3.5 ஆம் பிரிவு | மாதாந்த கழிப்பனவுகளின் கூட்டுத்தொகையின் எல்லை மாதாந்த சம்பளத்தின் 40 சதவீதத்திற்கு மேற்படலாகாத போதிலும் சபையின் பதவியணிக்கு மோட்டார் சைக்கிள் கடன் மற்றும் இடர் கடன் வழங்கப்படுகையில் மாதாந்தக் கழிப்பனவுகளின் கூட்டுத்தொகையின் எல்லை மாதாந்தச் சம்பளத்தின் 50 சதவீதமாகக் கருதப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. |
| **(இ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்** | |
| | (i) நிதிப் பிரமாணம் 104(1), 104(3), 104(4) மற்றும் 110 | 06 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் விபத்து நேர்ந்த நாள் முதல் 03 மாதங்களுக்குள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் இனங்காணப்பட்டு பரிந்துரைக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை உட்பட பூரணமான அறிக்கை ஒன்று பரிசோதனைக் குழுவால் பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அவ் விபத்துத் தொடர்பான விபரங்களடங்கிய இழப்புப் பதிவேடும் பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணம் 165 | வருமானத்திற்கான பணம், காசோலை மற்றும் ஏனைய பெறுவனவுகள் பொறுப்பேற்கப்படுகையில் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தல் இன்றி வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப் பிரமாணம் 387 | காசோலை மூலம் மேற்கொள்ளப்படும் சகல கொடுப்பனவுகளுக்காக காசேட்டில் வங்கி மீதி போதுமானதா என கொடுப்பனவு உத்தியோகத்தர் கருத்திற்கொண்டு ஆய்வுரீதியான விசாரிப்பு இன்றி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமையால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி மேலதிகப்பற்று ரூபா 17,148,432 தொகையாகக் காணப்பட்டது. |
| (iv) | நிதிப் பிரமாணம் 388 | தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும் சகல காசோலைகள் தொடர்பான விபரமும் உள்ளடக்கப்பட்டு பேணப்படும் பதிவேடு நிதிப் பிரமாணத்தின் படி முறையாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிதிப் பிரமாணம் 396 (ஈ) | காசோலைகள் வழங்கப்பட்ட நாள் அல்லது அது செல்லுபடியாகும் நாள் எனும் இரண்டில் பின்னர் எழும் நாள் முதல் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் காசாக்கப்படாதிருக்குமாயின் உரிய நிறுவனத்திற்குக் கடிதத்தின் மூலம் ஞாபகமூட்டப்பட்டு இதற்கும் பதில் கிடைக்காது போயின் உரிய காசோலையை இரத்துச்செய்ய வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டு முதல் 2013 யூன் 30 ஆம் திகதி வரை ரூபா 1,051,078 தொகையான சமர்ப்பிக்கப்படாத 45 காசோலைகள் |

| | | | |
|---|---|---|---|
| | | | தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (vi) | நிதிப் பிரமாணம் 446(2) | வருமானம் மற்றும் செலவினத்திற்காக வங்கி நடைமுறைக் கணக்கு வெவ்வேறாக பேணப்படுகையில் மீதி சமப்படுத்தப்பட்டு மிகுதிக் காசு மீதியை கணக்கீடு செய்வதற்காக பொழிப்பு பிரதான காசேடு பேணப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (vii) | நிதிப் பிரமாணம் 1645 மற்றும் 1646 | சபையின் 28 வாகனங்களுக்கு உரித்தான வாகன சம்பவக் குறிப்பேடு, நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்தப் பொழிப்பு உரிய மாதம் முடிவுற்று அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (viii) | நிதிப் பிரமாணம் 1647 (உ) | வாகனப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் 03 ஆம் பிரிவு | | நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2002 நவம்பர் 02 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | | கணனி மற்றும் கணனி உதிரிப்பாகங்களுக்காக வேறான ஓர் சொத்துப் பதிவேடு பேணப்பட வேண்டிய போதிலும் ரூபா 31,688,112 தொகையான கணனி மற்றும் உதிரிப்பாகங்களுக்காக அத்தகைய ஓர் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஊ) | 2009 திசெம்பர் 09 ஆம் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 756 மற்றும் 757 | குறித்த காலப்பகுதியில் நிதிப் பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு ஓர் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | 2010 திசெம்பர் 07 ஆந் திகதிய 150 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | சபைக்கு தேவையான வாகனங்கள் நிதிக் குத்தகைக் கொள்வனவு முறைமையின் கீழ் பெறப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக 05 ஆண்டுகளுக்காக குத்தகைக்கு 4 வாகனங்கள் பெறப்பட்டு 2013 திசெம்பர் 31 வரை ரூபா 10,051,179 தொகையான குத்தகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஏ) | 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவு | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக சபையால் பிரதிப் பணிப்பாளர்களுக்கு மாதாந்தம் ரூபா 5,500 தொகையான போக்குவரத்துப் படிப்பணமும், ஏனைய ஊழியர்களுக்கு நாளாந்தம் ரூபா 164 தொகையான எல்லைக்கு உட்பட்டு போக்குவரத்துப் படிப்பணமும் செலுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சுற்றறிக்கைக்கு முரணாகச் செலுத்தப்பட்டிருந்த மொத்த போக்குவரத்துக் கொடுப்பனவு ரூபா 5,004,963 ஆகக் காணப்பட்டது. |
| (ஐ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க நல்லாளுகை தொடர்பான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் | |

| | | |
|---|---|---|
| (i) | 5.2.3 ஆம் பந்தி | பாதீட்டைச் சமர்ப்பிக்கையில் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்காக பாதீடப்பட்ட வருமானம் மற்றும் செலவினக் கூற்று காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் அத் திகதியில் பாதீடப்பட்ட ஐந்தொகை மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 8.3.9 ஆம் பந்தி | சபைக்குரித்தான 05 வாகனங்களும் 05 உத்தியோகத்தர்களும் வரிசை அமைச்சின் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. 2013 ஆம் ஆண்டின் போது வாகனப் பராமரிப்புச் செலவினங்களும் பதவியணி சம்பளம் மற்றும் படிப்பணமாக முறையே ரூபா 3,204,138 தொகையும் ரூபா 899,195 தொகையுமாக ரூபா 4,103,333 கூட்டுத்தொகை சபையின் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 100,514,844 மிகையானதுடன் இதற்கு மாறாக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 60,305,699 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 160,820,543 தொகையான சாதகமான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டதுடன் அவ் அதிகரிப்பு தொடர்பான மொத்த வருமானப் பெறுவனவு ரூபா 69,380,831 ஆல் அதிகரித்திருந்தமையும் மொத்தச் செலவினம் ரூபா 91,439,712 தொகையினால் குறைவடைந்தமை முக்கிய காரணமாகியிருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

(அ) ஏற்றுமதி மேம்பாட்டு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

| பிரிவு | பௌதீக செயலாற்றல் | | | | நிதிச் செயலாற்றல் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித்திட்ட எண்ணிக்கை | இரத்துச் செய்யப்பட்ட அல்லது கைவிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் | போதியளவு நிறைவுபெறாத நிகழ்ச்சித்திட்டம் | பூர்த்தி செய்த நிகழ்ச்சித்திட்டத்தின் எண்ணிக்கை | செயலாற்றல் சதவீதம் | பாதீட்டு நிதிஒதுக்கீடு | உள்ளபடியான பயன்பாடு | பயன்பாட்டின் சதவீதம் |
| | | | | | நூற்றுக்கு | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | நூற்றுக்கு |
| தொழில்நுட்ப உற்பத்தி | 43 | 05 | 08 | 30 | 70 | 61.23 | 23.51 | 38 |
| கமத்தொழில், கடற்தொழில் உற்பத்தி | 39 | 04 | 14 | 21 | 54 | 53.78 | 31.86 | 59 |
| ஏற்றுமதிச் சேவை | 20 | 02 | 07 | 11 | 55 | 29.33 | 3.72 | 13 |
| விற்பனை அபிவிருத்தி | 42 | 01 | 07 | 34 | 81 | 64.98 | 40.48 | 62 |
| பிரதேச அபிவிருத்தி | 30 | 02 | 14 | 14 | 47 | 71.06 | 28.46 | 40 |
| ஏனைய ஏற்றுமதி சேவைகள் | 27 | | 04 | 23 | 85 | 29.28 | 10.85 | 37 |
| விசேட செயற்திட்டம் | 11 | 04 | 06 | 01 | 9 | 79.86 | 3.80 | 4.8 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஏனையவை | 02 | - | 02 | - | 0 | 115 | சமர்ப்பிக்க ப்பட்டிருக்க வில்லை | 0 |
| மொத்தம் | **214** | **18** | **62** | **134** | **62** | **505.02** | **142.68** | **28** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சபையின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி செயற்படுத்தப்படுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்ட எண்ணிக்கை 214 ஆகக் காணப்பட்டதுடன் இவற்றில் 134 மாத்திரமே பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. இதன் படி பௌதீகச் செயற்பாட்டின் செயல்முன்னேற்றம் 62 சதவீதமாகக் காணப்பட்டது. இந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 505.02 மில்லியன் தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 142.68 மில்லியன் தொகையான அதாவது 28 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் படி, இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தாமைக்கு தாக்கமளித்த காரணங்கள் இனங்காணப்பட்டிராததுடன் சில நிசழ்ச்சித்திட்டங்களுக்கு போதிய நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிராமையால் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படாமைக்குத் தாக்கமளித்த காரணங்களை இனங்கண்டிராமையால் அந் நிகழ்ச்சித்திட்டங்கள் மீள செயற்படுத்தப்படுகின்றனவா இல்லையா என்பது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளிநாட்டு விற்பனைச் சந்தைக் கண்காட்சி

ஏற்றுமதி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2008 - 2013 இற்கும் இடையேயான காலப்பகுதியின் போது 04 வெளிநாட்டு விற்பனைச் சந்தைக் கண்காட்சிக்காக ரூபா 65.38 மில்லியன் செலவிடப்பட்டு 82 ஏற்றுமதியாளர்கள் அதில் பங்குபெறச் செய்திருந்த போதும், ஏற்றுமதி மேம்பாட்டுக்கு அதில் 25 பேர் மாத்திரமே தமது பங்களிப்பைச்

செய்யக்கூடியதாக இருந்தனர். இதற்கமைய, ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கும் விதத்தில் வெளிநாட்டு விற்பனைச் சந்தைக் கண்காட்சியில் ஏற்றுமதியாளர்களைப் பங்குபெறச் செய்வது ஆக்கபூர்வமாக நடைபெறவில்லை.

(இ) பாடநெறி செயல்முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2009 – 2011 காலப்பகுதியின் போது சர்வதேச வியாபாரச் செயற்பாட்டுப் பிரிவு தொடர்பாக பாடநெறியைப் பின்பற்றும் அளவு முறை குறைவாகக் காணப்பட்ட போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது அந்த அளவு அதிகரித்திருந்தது. எவ்வாறெனினும், 2009 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2012 ஆம் ஆண்டின் போது 32 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. 2009 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2012 ஆம் ஆண்டின் போது 32 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. 2009 ஆம் ஆண்டின் போது பாடநெறிகள் நடாத்தப்பட்ட 04 தவணைகளிலானதுடன் 2013 ஆம் ஆண்டின் போது ஒரு பாடநெறி வரை குறைவடைந்திருந்தது.

(ii) புடவைத் துறையில் சேவையில் ஈடுபடுத்திய பதவியணிக்குப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டமைக்காகப் பெறப்பட்டிருந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்ட வருமானம் ரூபா 207,500 ஆகக் காணப்பட்ட போதிலும் இதற்காக ரூபா 1.04 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

4.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 156.6 மில்லியன் செலவில் நடாத்தப்பட்ட இலங்கை எக்ஸ்போ சர்வதேச வியாபார கண்காட்சியின் இலக்கும் நோக்கும் எய்தப்படுவதற்கு இயலுமை உள்ளதா என முன் சந்தை அவதானிப்புகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிராததுடன் கண்காட்சி நடாத்தப்பட்டதை அடுத்து கண்காட்சி நடாத்தப்படும் நோக்கையும் நோக்கையும் அடைவதற்கு முடிந்ததா என்பது குறித்து

மதிப்பீடோ அல்லது மீளாய்வோ 2013 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அம்பாறை கமத் தொழில் ஏற்றுமதி வலயத்திற்கு ரூபா 09 மில்லியன் தொகையான 1.2 மில்லியன் அன்னாசி மொரையன் வழங்கப்படுவதற்கு 2009 நவம்பர் 18 ஆம் திகதி வழங்குனருடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் படி, 50 சதவீத முற்பணத் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் 2010 பெப்ரவரி 25 ஆம் திகதி வரையில் 86,250 அன்னாசி மொரையன்கள் மாத்திரம் வழங்கப்பட்டமையால் செயற்திட்ட நடவடிக்கைகள் தடைப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் உரிய செயற்திட்டத்தின் நோக்கம் எய்தப்பட்டிராததுடன் முற்பணத் தொகையில் ரூபா 3,853,350 தொகை 2013 திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே இதன் தற்போதைய நிலை தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) கடன் வழங்கப்பட்டிருந்த 166 ஏற்றுமதிக் கம்பனிகளில் 23 கம்பனிகளுக்கு எதிராக மாத்திரம் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதை அடுத்து ரூபா 6,996,307 தொகையான நிலுவைக் கடன் மீதிகள் 2006 சனவரி 01 ஆம் திகதி முதல் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது ரூபா 2,801,711 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. 2007 ஆம் ஆண்டின் பின்னர் சட்ட நடவடிக்கைகள் மூலம் கடன் அறவிடப்படுவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராமையால் கடன் அறவிடப்பட்டு வரும் 23 ஏற்றுமதிக் கம்பனிகளில் 16 கம்பனிகள் கடன் செலுத்தத் தவறியிருந்தன. எஞ்சிய கம்பனிகளில் கடனை மீளச்செலுத்தியிராத 130 ஏற்றுமதிக் கம்பனிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 32,966,208 தொகையான கடனை அறவிடுவதற்காக 2014 யூன் 30 ஆம் திகதி வரையிலும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அலுவலகக் கட்டிடத் தொகுதி நிர்மாணிக்கப்படுவதை நோக்காகக் கொண்டு சபை, அபிவிருத்தி வங்கி ஒன்றுடன் இணைந்து தனியார் கம்பனி ஒன்றை 1993 நவம்பர் 18 ஆம் திகதி கூட்டமைத்திருந்தது. சபையால் உரிய கம்பனியின் பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு

ரூபா 161,088,760 தொகையானதுடன் இது அக் கம்பனியின் மொத்த பங்கு மூலதனத்தில் 41.39 சதவீதமாகக் காணப்பட்டது. எவ்வாறெனினும், 1996 – 2006 வரையான காலப்பகுதியின் போது பங்கிலாபம் செலுத்தப்படுவதற்கு போதிய இலாபம் உரிய கம்பனியால் உழைக்கப்பட்டிருந்த போதிலும் முதலீட்டிற்கான நலன்கள் சபைக்குக் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 30 கம்பனியின் முன்னுரிமைப் பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 105,058,084 தொகையான முதலீட்டிற்காக 1997 – 2013 காலப்பகுதிக்கும் 31 கம்பனிகளில் சாதாரண பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 43,494,334 தொகையான முதலீட்டிற்காக 2001 – 2013 காலப்பகுதிக்குரிய பங்கிலாபம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இந்தியாவின் சென்னை நகரின் 2004 – 2009 ஆம் காலப்பகுதியின் போது சபையால் நடாத்தப்பட்டுவந்த இலங்கை வியாபார நிலையங்கள் 05 இலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை வாடகையும் மின்சாரக் கட்டணமான ரூபா 7,049,858 தொகையும் 2014 யூன் 30 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(எ) ஏற்றுமதி கம்பனிகளில் நிதி சக்தியை வலுப்படுத்தி ஏற்றுமதி மேம்பாட்டின் மூலம் உயர் ஏற்றுமதி வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் 1983 – 1999 காலப்பகுதியின் போது ஆரம்பிக்கப்பட்ட கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 331 ஏற்றுமதிக் கம்பனிகளுக்கு ரூபா 46,413,543 தொகையான கடன் வழங்கப்பட்டிருந்தது. இதில் 166 கம்பனிகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 59,659,978 தொகையான கடன் தொகையில் ரூபா 46,486,856 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவில் காணப்படும் சபையின் செய்பாடுகளுக்கு மாறாகவும் பீஈடீ 12 ஆம் 2003 யூன் 02 ஆம் திகதிய நல்லாளுகை தொடர்பான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி அமைச்சரின் முன் அங்கீரம் பெறப்படாது 2018 பொது நலவாய விளையாட்டு அனுசரணையைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல், விளையாட்டு நடவடிக்கைகள் அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டிற்காக 2011 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டிருந்த ஒரு தனியார் கம்பனியில் பங்குகள் கொள்வனவு செய்யப்படுவதற்காக ரூபா 8 மில்லியன் தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், பொது நலவாய மன்ற விளையாட்டு விழாவில் அனுசரணை இலங்கைக்கு பெற்றுக்கொள்ளாமையால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் இக் கம்பனி நடவடிக்கைகள் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

(ஆ) பயிற்சி நடவடிக்கைகளுக்காக சபையில் இடவசதிகள் இருக்கையில், இதனைக் கருத்திற்கொள்ளாது 45 விண்ணப்பதாரிகளுக்கு அண்மித்த எண்ணிக்கையானோர் கலந்துகொண்ட ஒரு பாடநெறி வெளி நிறுவனத்தில் நடாத்தப்படுவதற்காக 2011 – 2013 காலப்பகுதியின் போது ரூபா 602,274 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 4.4 பதவியணியினர் நிர்வாகம்

சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் நிலைமை பின்வருமாறாகும்.

| பதவியணியினரின் வகைப்படுத்தல் | அங்கீரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| முன்றாம் | 65 | 54 | 11 |
| இரண்டாம் | 128 | 85 | 43 |
| முதலாம் | 75 | 61 | 14 |
| ஒப்பந்த | - | 13 | - |
| மொத்தம் | 268 | 213 | 68 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் கைத்தொழில் மற்றும் வியாபார நடவடிக்கைகள் அமைச்சுச் செயலாளருக்கு விடுவிக்கப்பட்ட 2010 ஆகஸ்ட் 13 ஆம் திகதிய டீஎம்எஸ்/ஈ4/30/4/200/2 ஆம் இலக்க கடிதத்தின் 11 ஆம் பந்தியின் படி பதவி வெற்றிடம் நிரப்பப்படுவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைகளத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 6.1.5 ஆம் பிரிவின் பிரகாரம் உதவிப் பணிப்பாளர் (பொது), உதவிப் பணிப்பாளர் (மனித வள முகாமை), உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) மற்றும் உதவிப் பணிப்பாளர் (நிதி) எனும் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகள் இன்றி மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) ஆட்சேர்ப்பு நடைமுறையின் படி, உரிய பதவிக்கு கல்வித் தகைமைகளும் சேவை அனுபவமும் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அத் தகமைகளைக் கொண்டிராத ஓர் உத்தியேதாகத்தர் உதவிப் பணிப்பாளர் (மனித வளங்கள்) பதவிக்காக ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஈ) 2006 செப்தெம்பர் 22 ஆம் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் படி முறையான அங்கீகாரம் இன்றி ஒப்பந்த அடிப்படையில் 13 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டு சம்பளமும் படியுமாக ரூபா 5,420,465 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 ஆம் திகதிய டீஎம்ஏ/2009/(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 07 மற்றும் 09 ஆம் பிரிவின் படி, உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டமும் கணக்காய்வுத் திட்டமும் தயாரிக்கப்பட்டிராததுடன் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது நலிவுற்ற நிலையில் இருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது 04 கணக்காய்வு ஐயவினாக்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ் ஐயவினாக்களில் குறிப்பிடப்பட்டிருந்த குறைபாடுகள் தொடர்பாகவும் சபையின் கவனத்தைக் கோரி சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடிடப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

5.3 தீர்க்கப்பட்டிராத கணக்காய்வுப் பந்திகள்

முன்னைய கணக்காய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்ட எனினும், போதிய கவனத்தைச் செலுத்தியிராத கணக்காய்வுப் பந்திகள் பின்வருமாறாகும்.

| 2012 ஆம் ஆண்டின் கணக்காய்வுப் பந்தியுடனான தொடர்பு | | கணக்காய்வுப் பந்தியின் சுருக்கம் |
|---|---|---|
| 2.2.6 | போதிய அதிகாரப்பொறுப்பில் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள் | 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அதிகாரச்சட்டத்திற்கு முரணாக நியமிக்கப்பட்டிருந்த நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை மாதாந்தப் படிப்பணம், எரிபொருள் படிப்பணம் மற்றும் தொலைபேசி கட்டணமாக ரூபா 1,557,337 கூட்டுத்தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. |
| 4.2 | முகாமைத்துவ வினைத்திறமையின்மை (இ) | ஊவபரணகம பசுமை இல்லம் செயற்திட்டத்தின் கீழ் உடன்படிக்கையிடப்பட்ட நிபந்தனையின் படி காய்கறிகளைப் பயிரிடுவதற்காக 100 பசுமை இல்லங்களை நிர்மாணிப்பதற்கு ரூபா 5 மில்லியன் கடனை விவசாயிகளிடமிருந்து அறவீடு செய்து பொதுத் திறைசேரிக்குக் கொடுப்பனவு செய்யும் பொறுப்பு சபைக்குக் வழங்கப்பட்ட போதும், அப் பொறுப்பையும் சபை நிறைவேற்றியிருக்கவில்லை. |
| 4.3 | இனங்காணப்பட்ட நட்டங்கள் | அம்பாந்தோட்டை படஅத கைத்தொழில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தோற்பொருள் கைத்தொழில் செயற்திட்டத்திற்காக ரூபா 1,000,000 முதலீடு செய்யப்பட்டு ஸ்தாபிக்கப்பட்ட தனியார் கம்பனியின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவது கைவிடப்பட்டிருந்தமையால் |

முதலீடு செய்யப்பட்ட தொகையை சபைக்கு அறிவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளிலும் கட்டுப்பாடுகளிலுமான குறைபாடுகள் அவ்வப்போது சபைத் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீடு
(ஆ) கணக்கீடு
(இ) முதலீடு
(ஈ) கடனை மீள அறவிடுதல்
(உ) சொத்து முகாமைத்துவம்
(ஊ) வியாபாரக் கண்காட்சி

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)
*Ms/v*